இலங்கைப் பாராளுமன்றம்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு சமர்ப்பித்த அறிக்கைக்கு ஏற்புடையதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : இலங்கைப் பாராளுமன்றம்

குழுவினால் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள்		குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
01	2004.05.11 ஆம் திகதிய 2004/171 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசதுறை ஊழியர்களுக்கு சம்பளம் தயாரிக்கும் கணினி மென்பொருளுடன் தொடர்புடைய முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றப்பட்டிருக்காமை.	சம்பளம் தயாரிப்பதற்காக பாராளுமன்றத்தினால் விசேட கணினி மென்பொருளொன்று பயன்படுத்தப்படுவதுடன் கடவுச்சொற்கள் ஒவ்வொரு 03 மாதங்களுக்கொரு முறை கட்டமைப்பு ஊடாகவே இற்றைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் கட்டமைப்புக்கான பிரவேசம் தடைபடும். அதன் மூலம் கட்டமைப்புக்கான பிரவேசத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
02	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்தபட்சம் இரண்டு கூட்டங்களையேனும் நடத்தாமை.	2021 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்டிருந்த பாதகமான சுகாதார நிலைமையானது அலுவலக நடவடிக்கைகளுக்கு தடைகளை ஏற்படுத்தியதால் ஒரு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டம் மட்டும் நடத்தப்பட்டதோடு அதன் பின்னர் இத்தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
03	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள்	வருடாந்தம் இருப்புப் பொருட்கள் சுற்றாய்வு செய்யப்படுகின்ற போதிலும் பாராளுமன்றக் கூட்டங்கள் மற்றும் குழுச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்காக பணியாட் தொகுதியினர் முன்னுரிமை வழங்குவதனால் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் சிறு தாமதம் ஏற்பட்டிருந்தாலும் 2023 ஆம் ஆண்டுக்கான

	நி.ஒ. 756(6) இன் பிரகாரம் இருப்புப் பொருட்கள் சுற்றாய்வு செய்யப்பட்டு குறிப்பிட்ட திகதியில் உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.	இருப்புப் பொருட்கள் சுற்றாய்வுக்காக ஏற்கனவே குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் உரிய காலப்பகுதிக்குள் அதனைப் பூர்த்தி செய்து அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
04	வருடாந்த இருப்பு பொருட்கள் சுற்றாய்வில் வெளிவந்த மிகை, பற்றாக்குறை தொடர்பான விதைப்புரைகளையும் ஏனைய விதப்புரைகளையும் உரிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தியிருக்காமை.	மேற்கூறப்பட்ட(3) ஆம் பதிலுடன் தொடர்புடையது. 2023 ஆம் ஆண்டுக்கான இருப்புப் பொருட்கள் பற்றிய சுற்றாய்வு அறிக்கைகளின் விதப்புரைகளை உரிய கால வரையறைக்குள் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
05	சகல வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்காமை.	பாதுகாப்புப் பேரவை வழங்கிய அறிவுறுத்தல்களின் பேரில் "செங்கோல்" இலச்சினை பாராளுமன்ற வாகனங்களிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பினும் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்களின் பேரில் மீண்டும் அதனை பொறிப்பதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
06	2016.12.29 ஆம் திகதிய 2016(30) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் தகனம் தொடர்பாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	2023 ஆம் ஆண்டில் பாராளுமன்ற வாகன சேர்மத்திலுள்ள வாகனங்களின் எரிபொருள் தகனம் தொடர்பாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
07	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்காமை.	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவையிலிருந்த கடன் மீதியனைத்தும் இன்றளவில் தீர்க்கப்பட்டுள்ளன.
08	2017.09.20 ஆம் திகதிய 2017(4) ஆம் இலக்க முகமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் பணியாட் தொகுதியினரின் தகவல்கள் காலாண்டொன்று முடிவடைந்து ஒரு மாதத்துக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு	பாராளுமன்றச் சேவையானது விசேட சட்டமொன்றின் ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் கடந்த காலத்திலிருந்து முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளுக்கு நேரடியாக இயைபுறவில்லை என்ற போதிலும் திறைசேரியினால் காலத்துக்குக் காலம் கோரும் தகவல்கள் அனைத்தையும் வழங்குமாறு

	அனுப்பப்பட்டிருக்காமை.	அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
09	சகல அலுவலர்களும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் பற்றிய பிரகடனங்களை முன்வைக்காமை.	2021 ஆண்டுக்கமைவாக அலுவலர்கள் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் பற்றிய பிரகடனங்களை வழங்குவதில் குறைவு காணப்பட்ட போதிலும் இன்றளவில் சகல அலுவலர்களும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் பற்றிய பிரகடனங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்